
# அறிவுக்கதிர்

අරිවුක්කදීර් Arivukqadir

அறிவு- 02 26.06.2023–26.07.2023 கதிர் 02


# தர்கா நகர் தேசிய கல்விய கல்லூரியில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்ட தியாகத் திருநாள்

கடந்த ஜீலை மாதம் 17ஆம் திகதி தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஹஜ் பெருநாள் நிகழ்வு ஆசிரிய பயிலுனர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மத்தியில் வெகு விமர்சையாக இடம் பெற்றதுடன் தியாகத் திருநாள் தொடர்பான நிகழ்வுகளும் இடம் பெற்றன.












## சுற்றுலா அறிக்கை மற்றும் காணொளி வெளியீடு

கல்லூரியில் கடந்த புதன்கிழமையில் இடம்பெற்ற காலைக் கூட்டத்தின் போது தர்காநகர் தேசியக் கல்வியியற் கல்லூரியினால் சென்ற சுற்றுலாவின் அறிக்கையும் அதன் காணொளி வெளியிடும் கல்வி சுற்றுலாவின் பொறுப்பு விரிவுரையாளர் த..தனேந்திரன் அவர்களால் தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் பவாநந்தன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.





தொடர்ச்சி- 02

# சூழல் நேய செயற்றிட்டங்கள்

சூழல் நேய செயற்றிட்டங்களில் மரங்களை வளர்ப்போம் என்ற தொனிப்பொருளில் எமது கல்லூரியில் முதலாம் மொழி தமிழ் பிரிவு மாணவர்களுடன் விரிவுரையாளர் தனேந்திரன் அவர்களால் கல்லூரி வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது.

கடந்த 06.07.2023 அன்று எமது கல்லூரியின் மர நடுகை தினம் இடம்பெற்றது. இத்தினத்தின் போது முதலாம் மொழி தமிழ் கல்வி மாணவர்களைக்கொண்டு 'மரங்களை நாட்டி சூ ழல் நேயத்தை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு இடம்பெற்றது.



## கல்லூரி ஆசிரிய மாணவர்களின் சூழல்நேய செயற்பாடு

இரண்டாம் வருட ஆசிரியர் பயலுநர்களினால் பீடாதிபதியின் முன்நிலையில் கல்லூரி வளாகமானது சிரமதானம் செய்யப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.





# அறிவுக்கதிர்

**அறிவுக்கதிர் –மின் சஞ்சிகை –தர்கா நகர் தேசிய கல்விய கல்லூரி–செந்தமிழ் மன்ற வெளியீடு**

දැනුමේ කිරණ-ර්-සඟරාව-දර්ගා නගර් ජාතික අධ්‍යාපන විද්‍යාලය-සෙන්තමිල් සංසදයේ ප්‍රකාශනය

Arivuquathir- E-magazine - Targa Nagar National College of Education - Senthamil Forum Publication


தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை சேர்த்தல் தொடர்பான பெயர் பட்டியல் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன் இதில் தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 27 வது ஆசிரிய அணி ஆசிரியமாணவர்கள் ஆரம்ப கல்வி , மனைப் பொருளியல் , முதலாம் மொழி தமிழ் தகவல் தொழில்நுட்பம், சமூக விஞ்ஞானம் ஆகிய பாடத்துறைகளுக்கு ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்பட உள்ளனர்.


**அறிவுக்கதிர் குழுமம்**

(2 வது கதிர்)

**ஆலோசனை வழிகாட்டி**

சதாசிவம் பவானந்தன்

பீடாதிபதி.

(தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி)

**பிரதம பொறுப்பு விரிவுரையாளர்–**

வீ. கணேஷ்வரன்

கல்வியும் தரமேம்பாடும்

(தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி)

**இணை பொறுப்பு விரிவுரையாளர்**

எம்.எச்.எம் ஹாரிஸ் மரிக்கார்

(இணைப்பாளர் கல்வியும் தர மேம்பாடும்)

**வள ஆலோசனை**

பீ. ரில்சாத்

(நிதி நிர்வாக இணைப்பாளர்)

(தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி)

**ஆசிரியப் பயிலுநர் குழு**

செந்தமிழ் மன்றம்

தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி. கணினி

**வடிவமைப்பு,**

பல்லூடகக் குழு– எம்.எச்.எப் ஹஸ்னா

**வெளியீடு**

தர்கா நகர் தேசிய கல்வியற் கல்லூரி –தர்கா நகர்







**நோக்க கூற்று**

'ஆசிரியர்கள் ஆக்கத்திறன்களை விருத்தி செய்வதன் ஊடாக உலகை வசமாக்குவர்.'

**பணிக்கூற்று**

'ஒவ்வொரு ஆசிரிய பயிலுநர்களையும் திறன் மிக்கவர்களாக உருவாக்குதல்.'

தொடர்ச்சி– 04

# கவி கதிர்

## தாய்மொழி

அறிவைத் தந்த மொழி
அழகை ரசித்த மொழி
ஆணவத்தை அடிப் பணியச்செய்த
அன்பின் ஆயுதமாம்
எம் தாய்மொழி
நட்புக்குள் வலம் வரும்
எளிமையான மொழி
உயர்வென்ற தாழ்வென்ற
பேதமில்லா பெருமொழி
ஏட்டிலே கற்க ஏதுவான
பழகுவதற்கு இலகுவான மொழி
நான் பற்றுக் கொண்டு
காதலிக்கும் செம்மொழி
தாய்மொழி....



**வீ.பிரியரஞ்சனி**
**மனைப்பொருளியல்**

## பெண்ணியம்

பூ மியில் உயிராய் தோன்றிட பெரும் தவம் செய்திருக்க வேண்டும்..
அதிலும் பெண்ணாய் பிறந்திடவே பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும்..

உயிர்களில் சிறப்பு பெண்மை...
உவமை ஏதும் இல்லாததாய்
பெண்மையின் தாய்மை..
அது இல்லையெனில் ஏது ஆண்மையின் ஆளுமை..

பெண் என்பவள் மாபெரும் சக்தி..
உயிரை உருவாக்குவாள் உயிர்சக்தியாய்..
படைத்திடுவாள் ஆக்கசக்தியாய்..
காத்திடுவாள் அன்னைசக்தியாய்..
அழித்திடுவாள் தீயசக்திகளை..

பெண்ணியம் என்னும் கண்ணியத்தை காத்திடுவோம் எந்நாளுமே..
ஒரு நாள் மட்டுமன்றி..
ஒவ்வொரு நாளும் பெண்களுக்கான தினமாய் சிறப்பாய் போற்றிடுவோமே..

**எம்.டீ.எப். ஸப்ரா**
**ஆரம்பக்கல்வி - ஆ**



## ஆசிரியர் தொழிலே வாண்மை தொழில்

கடலுக்கு எல்லை இல்லை
வானுக்கு எல்லை இல்லை
கற்ற கல்விக்கு எல்லை இல்லை
எல்லையில்லா கல்வியை
ஏட்டிலே தருவதே ஆசிரியர் தொழில்

கல்வி எனும் மூன்றெழுத்தை கற்று
கற்பக விருட்சமாய் மிளிர
கரைக்காணா கல்விச்செல்வத்தை ஊட்டி
வளர்ப்பது ஆசான் என்னும் மூன்றெழுத்தே.....

ஒரு தாய் ஒரு குழந்தையை தான் தன்
கருவிலே பெற்றெடுப்பாள்.
கல்வியில் கருவறையிலே பல குழந்தைகளை
பெற்றெடுப்பவரே ஆசிரியர்....

தான் பெற்ற செல்வத்தை பிறருக்கு அளித்திட
யாரும் விரும்புவாரோ....? அளித்திடத் தான்
முடிந்திடுமோ? அன்புடன் அரவணைப்பை
ஊட்டி அளித்திடும் இனிய தொழிலே
வாண்மைமிகு ஆசிரியர் தொழில்....

தன்னையும் வளர்த்து பிறரையும் வளர்க்கும்
வாண்மை இத்தொழிலிற்கே உண்டு.
வாழ்க கல்வி!
வளர்க கல்வி!
வளர்க ஆசிரியர் தொழில்....!

**ஆக்கம்:**
**ஜெ.கிறேன் செல்வியா**
**ஆரம்பபிரிவு - அ**



தொடர்ச்சி - 05

# ஆசிரியருக்கு

பத்து மாதத்தில், ஒரு குழந்தையை பிரசவிக்கிறாள் தாய்..
நீயோ ஒரு வகுப்பறையையே பிரசவிக்கிறாய்..
பெற்றோரின் கை விடுத்து உந்தன் கை பிடித்து,
அரை மனதுடன் வகுப்பறை நோக்கி நடந்த தருணம்..
கல்விப் பயணம் இனிதே தொடக்கம்..

அன்றிலிருந்து எங்கள் ஒவ்வோர் அசைவிலும் நீ ...
குடும்பம் தாண்டிய குழந்தையின்
முதல் சமூக உறவு நீ,
முதல் பாராட்டு, முதல் அவமானம்
முதல் பரிசு, முதல் தோல்வி
அனைத்திலும் ஏதோ ஒருவிதத்தில் நீ..
சில நேரங்களில் மழலை மனதின்
முதல் காதலும் நீ..

அலைபாயும் மனதை
அடக்கிவிடும் உன் அதட்டல்,
கவனச் சிதறலை பறந்து வந்து முறியடிக்கும் சுண்ணக்கோல்,
கொடுங்கோல் மன்னன் போல்
கையில் பிரம்போடு நீ வந்தால்,
வகுப்பறைக்குள் நிலநடுக்கம்
வந்ததுபோல் குலைநடுக்கம்...

தாமத வருகைக்கு பஸ் லேட்,
பள்ளி வராமைக்கு பாட்டியின் சாவு,
பாடம் எழுதாமைக்கு பவர் கட்,
வகுப்புகள் மாறலாம் ஆனால் காரணங்கள் மாறியதில்லை..
ஆசிரியர் மாறலாம் ஆனால் அடிகள் மாறியதில்லை..

குறும்புகள் ரசித்து,
குழப்பங்கள் தீர்த்து
தவறுகள் திருத்தி
திறமைகள் உணர்த்தி
வெற்றிக்கு விழா எடுத்து
தோல்விக்கு தோள் கொடுத்து
வருடங்கள் பதின்மூன்று
வகுப்பறைக்குள் சுமந்து
வாழ்த்தி வழியனுப்பும்
வாடகைத் தாயோ நீ..

உன் வழி பின்பற்றிய
நானும்... ஒரு ஆசானாக உன் முன்பு



**பீ. சோபனா**
**ஆரம்பக்கல்வி - ஆ**

# வாசிப்பை நேசிப்போம்....

வீட்டிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே.....
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே!!!!

வாசிக்காமல் யார்க்கும்
வளர்வதில்லை அறிவு...
இதனை நேசிக்காமல் போனால்..
வளர்ச்சிக்கே முறிவு!!!

பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையுமே நேசி!!!!

ஊருலகம் யாவும் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்தும் விளக்கும்
கற்றறிய குறுகிய காலம் போதும்!!!

இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
கற்றறியும் வழக்கமிருந்தால்
சுடர் விடும் உன் அறிவெப்போதும்!!!

கற்பனை உலகிற்கே - நம்மை
இட்டுச் செல்லும் புத்தகங்கள்
மூளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்!!!

நூலகங்கள் சென்று வர
நாளும் நீ தவறிடாதே
நுண்மதி பெருக்கி வைக்கும்
நூல் கற்க மறந்திடாதே!!!

புதுப்பித்துக் கொள்ள நீயும்
புத்தகம் வாசித்தே பழகு - உன்னை
புதுப்பிக்க புதுப்பிக்க
புறந்தள்ளாது இந்த உலகு!!!!

வாசிப்பை நாளும் நேசிப்பாய்
நல்ல நூலனைதுமே சுவாசிப்பாய்
அறிவாளியாக்கும் உன்னை அறிவாய்
அனைவர் மதித்திட நீ உயர்வாய்!!!



**எஸ். இரோசினி**
**ஆரம்பகல்வி - ஆ**

தொடர்ச்சி - 06

# பிறருக்கு உதவுவோம் பெருமை கொள்ளாதிருப்போம்.

ஓர் அடர்ந்த காட்டில் குயில் ஒன்று அதன் குஞ்சுகளோடு வாழ்ந்து வந்தது. ஒரு நாள் குயில் தனது குஞ்சுகளுக்காக இறைத்தேட வெகுதூரம் பறந்து சென்றது. இரைத்தேடி முடித்து தனது கூட்டிட்டு செல்லும்போது மழை பெய்தது. இதனால் குயிலுக்கு பறந்து செல்ல முடியவில்லை. தனது சிறகுகள் மழையால் நனைந்து பறக்க முடியாமல் இருந்தது. அதனால் தனது சிறகுகளை உலர்த்துவதற்காக பப்பாசி மரத்திடம் சென்று கேட்டது. `என்னுடைய சிறகுகள் இரண்டும் மலையால் நனைந்து பறக்க முடியவில்லை கொஞ்சம் இடம் தந்தால் என்னுடைய சிறகுகளை உலர்த்திவிட்டு சென்று விடுவேன் இடம் தருவாயா?` என்று கேட்டது.

அதற்குப் பப்பாசி மரம் `நான் உனக்கு இடம் தந்தால் நீ என்னிடம் இருக்கின்ற இனிப்பான பழங்களை தின்று விடுவாய். நான் உனக்கு இடம் தர மாட்டேன்` என்று பெருமிதமாக கூறியது. இதைக் கேட்ட குயில் கவலையுடன் தனது குஞ்சுகள் எல்லாம் பசியால் இருக்கும் எப்படி செல்வது என்று யோசித்துக் கொண்டே மாமரத்திடம் சென்று இவ்வாறு கேட்டது. மாமரமும் அவ்வாறே பதிலளித்தது. கடைசியாக வேப்பமரத்திடம் சென்று கேட்டது. வேப்பமரம் குயிலை பார்த்து `குயிலே உனக்கென்று கொடுப்பதற்கு என்னிடம் சுவையான பழங்கள் எதுவும் இல்லை. ஆனால், நீ தாராளமாக என்னுடைய கிளையிலிருந்து உனது சிறகுகளை உலர்த்தி மழை நின்றவுடன் செல்` என்று இரக்கத்தோடு சொன்னது. குயில் வேப்ப மரத்து கிளையிலிருந்து தனது சிறகுகளை உலர வைத்தது. பின்னர் மழை நின்றவுடன் வேப்ப மரத்திற்கு நன்றி கூறிவிட்டு மகிழ்ச்சியோடு கூட திரும்பியது.



**ஏ. தீபா**
**ஆரம்பக்கல்வி - இ**

முதல் தொடுதல் அழகு
முதல் முத்தம் பேரழகு
என்னையே நான் அறியாத்தருணத்தில்
உன் முதல் முத்தம் பெற்றேன்
முதல் முத்தமிடுகையில் என்னென்ன நினைத்தாயோ?
அள்ளி அணைக்கையில்
துள்ளிக் குதித்தாயோ?
உன் உதிரத்தின் உணர்வெல்லாம் உயிர் பெற்றதாய் உள்ளம் களித்தாயோ?
உன் உடல் கண்ட வேதனைகளெல்லாம் எனைக்கண்டதும் முழுவதும் மறந்தாயோ?
நிலவு காட்டி சோறூட்டிய நாள் தொடங்கி உன் நினைவுகள் முடியும் வரையிலும் என்னை மட்டுமே நெஞ்சில் தூக்கி சுமப்பவள் நீ
பள்ளிப்பாடம் தொடங்கி
பல நூறு கற்றுக்கொண்டேன் உன்னிடம்
பள்ளிக்கதை முழுதும்
பேசித்தீர்த்த காலம்
தொடங்கி நொடி தோறும்
உன் புடவை தலைப்புத்தான்
என் உரிமைக்கொடி



காலங்கள் கடந்தோடியது
வாலிப வாசலிலே
நம்மிடையே மௌனமென்ற இடைவெளியைய்
ஒட்டிவிட்டேன் மெதுமெதுவாய்
போய் வருகிறேன் என்ற வார்த்தை கூட சுருங்கி வருகிறேன்
என்றாகி சில நேரங்களில் வெறும் தலையசைப்போடு முடிந்துபோனது

வெறுப்பாய் நான் பேசினாலும் வேடிக்கையாய்
பேசினாலும் புன்னகையை மட்டும் பதிலாக தந்தவள் நீ
ஆண்டுகள் கடந்த பின்னும் ஆதரவு
வேண்டுமென்றால் சட்டென்று உனைத்தானே என்
உள்மனது தேடுதிங்கே
ஒருபோதும் உன்னிடம் நான் தந்ததில்லை பரிசுகள்
ஒளிதரும் கதிருக்கு ஒற்றை மெழுகுதிரி தந்தால்
ஈடாகுமா?
இருக்கட்டும் தருகிறேன்
பரிசொன்று இன்று முத்தமென்ற பனித்துளியால் உன்
ஒளிக்குள் கரைகிறேன்.
உணர்வு முழுசா ஒடஞ்சாலும் என் உயிர் சொல்லும்
மந்திரச்சொல்
அம்மா......

**முப்ரா கமால்தீன்**
**ஆரம்பகல்வி -பீ**

தொடர்ச்சி- 07

# நாட வேண்டும் நல்ல நூல்களை !

மனிதர்களை நல்வழிப்படுத்த புத்தகம் சிறந்த நண்பனாகவும் , வழிகாட்டியாகவும் திகழ்கிறது. அதனால்தான், ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச்சிறந்த பரிசு. ஒரு புத்தகம் தான் ' என்கிறார் வின்ஸ்டன் சர்ச்சில். 'உலக வரைபடத்தில் உள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம் போக விரும்புகிறாயா. ஒரு நூலகத்திற்கு செல் ' என்பார்கள்.

துப்பாக்கியிலிருந்து வெளியேறும் தோட்டாவை விட வீரியமான ஆயுதம் , புத்தகம்' என்றார் மார்ட்டின் லூதர் கிங். 'புத்துலகம் படைக்க புத்தகம் படிப்போம் ' என அப்துல் கலாமும் கூறுவர். 'நூலகம் என்பது ஓய்வுநேர உலகம் ' என்றும், 'மூன்று நாள் பயணம் என்றாலும் விமானத்தில் போகாமல் காரில் பயணிப்பது ஏன்? என வினவியபோது , பத்துப் புத்தகங்கள் படிக்க வேண்டியிருந்தது ' என்றார் அண்ணாதுரை . தனிமை தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் ?' என்று கேட்கப்பட்ட போது 'புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு வருவோம் ' என பதில் மொழிந்தாராம் நேரு. இதேபோல் 'அறிவால் உயர்ந்து அரியாசனம் செய்வோம் 'என்கிறார் காந்தி.

'எங்கே தங்க விரும்புகிறீர்கள் 'என லண்டன் தோழர்கள் கேட்டபோது, எந்த விடுதி நூலகத்திற்கு அருகில் உள்ளது, என கேட்டாராம் அம்பேத்கர். தான்தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை படித்துக்கொண்டே இருந்தார் பகத்சிங். மேற்கூறிய செய்திகள் அனைத்தும் நமக்கு உணர்த்துவது யாதெனில், புத்தகம் வாசித்தால் வாசித்த சிந்தனைகளை வானமளவு யோசித்தால் இவர்கள் அனைவரும் மக்களால் நேசிக்கப்பட்டவர்கள் என்பது நமக்கு புலப்படுகின்றது. தொட்டனை தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்கற்றனைத் தூறும் அறிவுமணற்கேணி தோண்டத் தோண்ட நீர் தருவது போல் நூல்கள் கற்கத்தக்க அறிவு பெருகும் என்கிறார் , வள்ளுவர் நூல் பல கல் என்கிறது அவ்வையின் மொழி.

புத்தகங்கள் என்பது வெறும் எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்ட காகிதங்களின் தொகுப்பு அல்ல. மாறாக அது தலைமுறைகளின் வரலாற்றை பதிவு செய்யும் பொக்கிஷங்கள். வரலாற்று நிகழ்வுகளையும் இன்றைய செய்திகளையும் எழுத்தின் வழியே எதிர்கால தலைமுறைக்கு கொண்டு செல்ல உதவும் கருவிகள். புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் இருப்பின் சக மனிதர்களை நேசிக்கும் பழக்கம் தானே வரும் என்பார்கள். சிந்தனையின் தூண்டுகோல் புத்தகங்கள். பரந்துபட்ட அறிவை பெற பல்துறை புத்தகங்களையும் வாசிப்பது அவியம் என்பது கற்றறிந்த பெரியவர்களின் கருத்து.இன்றைய தலைமுறை பிள்ளைகளுக்கும் புத்தங்களை பரிசளித்து அவர்களுக்கு வாசிப்பை ஊக்கப்படுத்துவோம். இவ்வுலகை அறியச்செய்வோம். புத்தகம் வாசிப்பு என்பது ஓடும் நதி போன்றது.ஒரு புத்தகம் இன்னொரு புத்தகத்திற்கு நம்மை அழைத்து செல்லும்.நல்ல தெளிவு பிறக்க நூல்கள் படிப்பது அவசியம் என உணர்வோம்.எனவே தமிழை அமிழ்தென நேசிப்போம், தினமும் அதனை வாசிப்போம்.

ப. பபித்ரா
ஆரம்பக்கல்வி – அ



# வாசிப்பின் பசுமை

'வாளினுடைய கூர்மையும் நூலினுடைய கூர்மையுமே ஒரு நாட்டை ஆளும்' என்று கூறுவார்கள் இன்றைய கால கட்டத்தில் நூலின் உடைய கூர்மைதான் உலகத்தையே ஆழ்கிறது என்றால் அது மிகையல்ல. அதாவது மனிதனை மனிதனாக்குவது இந்த கல்வியும் அதனோடிணைந்த வாசிப்பும் தான் இதனை "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என ஔவையார் நாலடியார் எனும் நூலில் பாடுகிறார்.

இதன் மூலமாக ஒரு மனிதனுக்கு கல்வி அறிவு எந்த அளவுக்கு முக்கியத்துவமானது என்பதனை அறிய முடிகிறது. தொட்டனைதூறும் மணற்கேணி மாந்தற்கு கற்றனைதூறும் அறிவு" என்கிறார் பொய்யாமொழி புலவர் அதாவது மண்ணை எவ்வளவு ஆழமாக தோண்டினால் நீரானது சுரப்பதனை போல நல்ல நூல்களை கற்பதனால் மனிதர்களுக்கு நல்லறிவானது தோன்றும் என்பது பொருள்.

மனிதன் நிறைய நூல்களை படிக்க படிக்க அறிவானது வளர்கிறது. இதனை நான் சொல்ல காரணம் நஞ்சு கொடுக்கப்படும் வரை கிரேக்க நாட்டு நூல்களை படித்து கொண்டிருந்தவர் "சோக்ரட்டீஸ்" இறக்கும் தருவாயிலும் கூட படிப்பின் மீது ஆழமான பற்றுதலோடு கற்றிருந்தார்கள்.தான் படித்த புத்தகத்தை முடித்து விடவேண்டும் என்பதற்காக அறுவை சிகிச்சையை தள்ளி போட சொன்னவர் "அறிஞர் அண்ணா".33 ஆண்டுகள் நூலகத்தில் மூழ்கி மூலதனம்" எனும் கம்யூ னிச சித்தாந்தத்தை கண்டு பிடித்தார் கார்ல் மார்க்ஸ்".
அது மாத்திரமன்றி 'படிப்பால் மட்டுமே பாரதத்தால் பார் ஆழலாம்' என்று கூறியவர் அப்துல் கலாம் இவ்வாறு வாசிப்பு ஒரு மனிதனின் வாழ்க்கையையே மாற்றிவிடும் அளவுக்கு சிறப்பு வாய்ந்தது. வாசிப்பு ஒரு மனிதனுக்கு பல்வேறான அனுபவங்களை கற்று தரவல்லது "ஒரு நல்ல நூலானது பல நல்ல நண்பர்களுக்கு ஒப்பானது" என்று கூறுவார்கள்.
பல அறிஞர்களும் வாசிப்பின் அவசியம் பற்றி ஏன் கூறவேண்டும். ஏனென்றால் வாசிப்பு அந்தளவிற்கு எமது வாழ்க்கைக்கு நிறைய பாடங்களை கற்று தருகின்றது. கம்பனுடைய ஒரு செய்யுள், பாரதியினுடைய ஒரு பாட்டு, ஏன் கண்ணதாசனுடைய ஒரு வரி நம்முடைய வாழ்க்கையையே புரட்டி போட்டுவிடும். இதுவே வாசிப்பினுடைய மகத்துவம். ஒரு வரி பல அர்த்தங்களையும் அனுபவங்களையும் எமக்கு சொல்லும்.

வாசிப்பதனால் மனிதன் பூ ரணம் அடைகிறான் என்று கூறுவார்கள். வாசிப்பு எமக்கு அறிவினை மாத்திரமன்றி சிந்திக்கின்ற ஆற்றல், பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள், கற்பனை ஆற்றல், படைப்பாற்றல், பொறுமை, மன ஒருநிலைப்பாடு, மற்றும் சஞ்சலமற்ற மனநிலை போன்ற பல நல்ல குணங்களை எமக்கு தருகிறது.மகாத்மாகாந்தியனுடைய சத்தியசோதனை புத்தகம் தான் "மார்ட்டின் லூதர் கிங்" இனை உருவாக்கியது. 'எட்டானல் வெலோசிற்றி' எனும் நூல் தான் 'டாக்டர் அப்துல் கலாமை' அணு விஞ்ஞானியாக மாற்றியது என அவரே குறிப்பிட்டுள்ளார். ஆகவே வாசிப்பு மனிதனது வாழ்க்கையை எப்படிமாற்றியிருக்கிறது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும்.

**சி. சித்ராங்கனி**
**ஆரம்பகல்வி - ஆ**



தொடர்ச்சி - 09

# தமிழ் அவமானம் அல்ல அடையாளம்

## செம்மொழியான தமிழ்

மொழி என்பது தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு ஊடகமாகும். எனவே மிக முக்கியத்துவம் பெறுகின்றது தகவல் ஒரு குறிப்பிட்ட மொழியின் மூலம் பரிமாற்றப்படுகின்றன. சில மொழிகள் மிகப் பழமையானவையாகவும் இலக்கியத்தில் சிறந்து விளங்குவனவாகவும் உள்ளன. உலகில் பேசப்படுகின்ற உலகில் பேசப்படுகின்ற முறை மொழிகளில் பல எழுத்து வடிவங்கள் இல்லாமையால் அவற்றை பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியாமல் உள்ளன .நீண்ட கால இலக்கண இலக்கிய பாரம்பரியத்தினை கொண்டதாக உள்ள செம்மொழி என பொதுவாக கூறப்படும் ஒரு மொழியின் சிறப்பானது அம் மொழியின பழமை வாய்ந்த இலக்கியங்கள் கலைப்பணிப்புகள் என்பவற்றை சான்றாகக் கொண்டுள்ளது. ஆரபு சீனம் கிரேக்கம் இலத்தீன் பாரசீகம் சமஸ்கிருதம் தமிழ் ஜிப்ரல் எனும் எட்டு மொழிகளை செம்மொழிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன. மொழிகளில் தனித்துவம் கொண்டதாக விளங்கும் தமிழ் மொழி செம்மொழியாக கருதப்படுகின்றது.

2000 ஆண்டுகளுக்கு மேலாக தன்னிகரற்ற இலக்கிய வரலாற்றுடன் நிலைத்து வாழ்ந்து வரும் தமிழ் மொழிக்கு செம்மொழி என்கின்ற உயர்தகுதியை 2004 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 17ஆம் நாள் இந்திய அரசு அறிவித்தது இதன் மூலம் தமிழ் மொழிக்கு உலக அரங்கிலும் தேசிய அளவிலும் மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஞாலத்தில் தோன்றிய மாந்தர்கள் முதலில் பேசிய மொழி தமிழ் இதனை,

" வையம் ஈன்ற தொன்மக்கள்
உலத்தினை
கையினால் உறைக்காலம்
இருந்திட
பைய நாவை அசைத்த
அசுரத் தமிழ்
ஐயை தாள் தலைக்கொண்டு
பணிகுவான்" என உரைக்கிறார் தஞ்சை பெரும் புலவர் நீ கந்தசாமி அவர்கள்...

நாளை முதல் மொழி திராவிட மொழிகளுக்கு தாய்மொழி பழமையான சிறந்த இலக்கிய செல்வங்களைக் கொண்ட மொழி இன்று வரை வழக்கில் உள்ள மொழி என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட மொழி தமிழ். இம்மொழிக்கு செம்மொழி எனும் தகுதி கிடைத்ததில் வியப்பொன்றுமில்லை. நாளை முதல் மொழி திராவிட மொழிகளுக்கு தாய்மொழி பழமையான சிறந்த இலக்கிய செல்வங்களைக் கொண்ட மொழி இன்று வரை வழக்கில் உள்ள மொழி என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட மொழி தமிழ் இம்மொழிக்கு செம்மொழி எனும் தகுதி கிடைத்ததில் வியப்பொன்றுமில்லை.

உலகில் பயின்று வருகின்ற செம்மொழிகளில் தமிழ் மொழிக்கென தனித்துவமான சிறப்பு உண்டு. உலகில் வேறு எந்த மொழிகளில் காணப்படாத அலைமையான தொன்மையான இலக்கிய பாரம்பரியத்தையும் கொண்டது. தமிழ் மொழி இதன் இலக்கியச் செழுமையானது வேற்றுநாட்டவரும் கண்ணுற்று வியக்கத்தக்கதாக உள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

சான்றோர்களால் படிப்புலகி கொடையாக்கப்பட்ட இலக்கியங்கள் தமிழில் கம்பன் முதல் பாரதி வரை தமிழில் காண விரும்பிய மாற்றங்கள் இன்று வரை நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது மகாகவி பாரதியார் தமிழில் காண விரும்பிய மாற்றம் தமிழ்இலக்கிய பரப்பிற்கு வலு சேர்த்தது .

தொடர்ச்சி- 10

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவது எங்கும் காணோம்

பாமரராய் வி லங்குகிறாய் உலக அனைத்தும்

இகழ்ச்சி சொல பான்மைக்கு

நாமமது தமிழர் என கொண்டிங்கு

வாழ்ந்திடுதல் நன்றோ

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்

பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ன முண்டாசுகவி பாட்டு உரைத்து சென்றது தமிழில் காணப்படுகின்ற இனிமை இனி உணர்ந்தே ஆகும்.

உலகில் காணப்படுகின்ற வேறு எந்த மொழிகளிலும் இல்லாத அளவிற்கு செழுமையும் சிறப்பும் தமிழ் மொழியில் காணப்படுகின்றது. உலகில் வழக்கில் உள்ள செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் காணப்படுகின்ற இலக்கியச் சிறுமைக்கு வேறெந்த மொழியும் இணையாகிடாது. அதனாலேயே வேறு நாட்டவரும் வேற்று மொழியினை பேசுவோரும் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்தும் தமிழனை கற்றும் வருகின்றனர். திராவிடம் சார்ந்த பண்பாட்டிற்கு தமிழ் மொழி ஆதாரமாக உள்ளது இம்மொழி 6000 ஆண்டுகள் இலக்கிய பழமை வாய்ந்தது என்று கூறப்படுகின்றது. தமிழ் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே எழுத்து வழக்காகவும் பேச்சு வழக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் பிற மொழிகளோடு வளமாக வாழ்ந்து தான் சார்ந்த மொழிகள் பல அழிந்த பின்பும் இன்றும் கூட வளத்தோடு வாழும் ஒரே மொழியாகவும் தமிழ் மொழி விளங்குகிறது. உயிர் துடிப்புள்ள இலக்கியங்கள் இன்றும் தமிழ் மொழியில் உருவாகிய வண்ணமே உள்ளது செம்மொழியான இலக்கிய வளம் விழுமியம் புதுமை மரபு உயரிய சிந்தனை பாரிய சொல்வளம் வரலாற்றுப் பின்னணி தனித் இயங்கும் மாண்பு அழிவில்லாத வாழ்வு காலத்திற்கு ஏற்ற புதுமை என பல வகையிலும் சிறப்புடைய மொழியாக தமிழ் மொழி திகழ்கின்றது.

தமிழ் மொழியின் பின்பற்றிய முன்னோர்கள் பயன்பாட்டு மிக்கவர்களாகவும் விளங்கியதால் தமிழ் இன்றும் சிறப்புமிக்க முடியாத விலங்குகின்றது. தமிழ் மொழியில் உள்ள திருக்குறள் தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து அளிப்பதாக உள்ளது. திருக்குறள் சுமார் 80 மொழிகளின் மொழிபெயர்க்கப்பட்ட உலக நூலாக உள்ளது. உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தை திருக்குறள் விளங்குகிறது. அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்று பல்கலை கொண்டதாகவும் 1330 இறட்பாக்களையும் உள்ளடக்கியதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. தமிழ் தொன்மையான மொழி என்பதற்குரிய சான்றுகளுள் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும் அடங்கும். இது தமிழ் மொழிக்கு அழகு சேர்ப்பதாக உள்ளது. பிறமொழி இலக்கியங்களுக்கு ஓராயிரம் ஆண்டுக்கு முன்னர் உருவான இலக்கியத்தைக் கொண்டது.

தமிழ் என்பதற்கு இந்நூல் துணை புரிகின்றது. சிலப்பதிகாரம் மணிமேகலை பெரியபுராணம் கம்ப ராமாயணம் போன்ற காவியங்களும் தமிழ் ஒரு செம்மொழி என்பது கட்டியம் கூறுகின்றன. இளங்கோவடிகளால் பாடப்பட்ட சிலப்பதிகாரம் சங்க பாடல் ஒன்றில் வரும் சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. செம்மொழி என்று தகுதியை தமிழுக்கு பெற்றுத் தந்த இலக்கியங்கள் அனைத்தும் பல்வேறு கருத்துக்களை நல்கின்றன. அத்தகைய கருத்துக்கள் கைவிடப்பட்டு வெறும் மொழியாக மட்டுமே தமிழை நாம் அணுகின்றோம் என்றால் தமிழ் தாய் தனது செம்மையை இழந்து விட்டாலோ என்ற அச்சம் மனதில் எழுகின்றது. பிற மொழி கலப்பை தமிழின் தனித்துவம் கெடாத வகையில் ஏற்று தமிழிசை மொழியாக சிறப்பு மிக்க மொழியாக வைத்திருப்பது நமது முக்கியமான கடமையாகும். தமிழை உபயோகப்படுத்த யோசிக்கும் தமிழரே நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும் .நீ முதன்மையாக கருது மொழி பேசும் மக்கள் வேற்று மொழிகளை கற்றாலும் பேசுவது தன் தாய் மொழியிலேயே காரணம் .அவர்களுக்கு தெரியும் அவர்கள் மொழியின் ஆளுமை அருமை. ஆனால் நம் தமிழ் மக்களும் கல்வி அறிவியல் மருத்துவம் மேலும் பல என அனைத்திலும் சிறந்த நம் அருமை தெரியாமல் ஆடம்பரம் என நினைத்து மற்ற மொழிகளுக்கு அடிமையாகி நம் அழகு தமிழ் மொழியை மறைக்கின்றோம். உன் மொழிக்கு முதன்மை உரிமை கொடுக்க வேண்டியது உன் கடமை ஆனால் நீயோ உன் தமிழை தவிர்த்து மற்ற மொழிகளில் அனைத்திற்கும் முன்னுரிமை கொடுக்கின்றாய் "ஆங்கிலம் பேசினால் பெருமையும் அல்ல தமிழ் பேசினால் அவமானமும் அல்ல" உன் தாய்மொழி நீ பேசிய முதல் வார்த்தை அம்மா என்பதை மறந்து விடாதே நீ!

ப. பவித்ரா
ஆரம்பக்கல்வி–அ